நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி.

முன்னிலை–திரு.அ.பாசில் முகமத்,B.B.A.,LL.B(HONS)
நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

**2026** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **06** ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்:590/2023

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
கடமலைக்குண்டு காவல் நிலையம் ,
குற்ற எண்.424/2023. குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

சபரீஸ்

எதிரி

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>கடமலைக்குண்டு காவல் நிலையம் ,<br>குற்ற எண்.424/2023. | எதிரி :<br>சபரீஸ் |
| 2. | எதிரியின் வயது | 47/2026 |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த.பெ. மலைச்சாமி |
| 4. | மதம் | இந்து |
| 5. | தொழில் | கூலி |



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:15 +0530

| | | |
|---|---|---|
| 6. | முகவரி | கிழக்குதெரு, மந்திசுனை |
| 7. | தாலுகா, மாவட்டம் | ஆண்டிபட்டி தாலுகா தேனி மாவட்டம் |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 16.10.2023 |
| 9. | கைது | 20.10.2023 |
| 10. | பிணையில் விடுவித்தல் | 26.10.2023 |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | 7 நாட்கள் |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 29.10.2023 |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 29.12.2023 |
| 14. | கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 11.03.2026 |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 12.03.2026 |
| 16. | விசாரணை துவக்கம் | 12.03.2026 |

| 17.சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | Witness | Chief | Cross |
|---|---|---|---|
| | PW1 | 12.03.2026 | 12.03.2026 |
| | PW2 | 27.03.2026 | 27.03.2026 |

| | | |
|---|---|---|
| 18. | விசாரணை முடிவு | 02.04.2026 |
| 19. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 02.04.2026 |
| 20.பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள் | | 348 BNSS Crl.M.P.902/2026. |



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:21 +0530

| | | |
|---|---|---|
| | | Petition allowed<br>359 BNSS Crl.M.P.802/2026.<br>Petition Dismissed |
| 21. | தீர்ப்பு விவரம் | விடுதலை. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | ஆம். |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் | இல்லை |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது. |

*****

இவ்வழக்கானது, கடந்த 29.12.2023 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.செல்வக்குமார் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

1. **வழக்கின் சுருக்கம்:**

கடந்த 16.10.2023 ம் தேதி 21.30 வாதி கடமலைக்குண்டில் உள்ள தனது பாட்டியான இந்துராணி வீட்டின் முன்னால் உட்கார்ந்து



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:26 +0530

பேசிக்கொண்டிருந்தபோது எதிரி வாதியைப் பார்த்து தெருவில் வைத்து பெண் என்றும் பாராமல் ஏண்டி தேவிடியா கொண்டி, யாரையோ வச்சுருக்கடி என அசிங்கமாக பேசியபோது வாதி எதிரியிடம் எதுக்கு தேவையில்லாமல் பேசுறீங்க நம்ம குழந்தைக்கு ஏற்கனவே உடம்பு முடியாம இருக்கான் இப்ப நீங்களும் வீண் சந்தேகப்பட்டு பேசினால் நான் என்ன செய்யுறது இனிமேலும் இதுபோன்று பேசாதீங்க எல்லாரையும் போல நம்மலும் நல்ல வாழனும் என எதிரியிடம் சொன்னபோது எதிரி கையால் வாதியின் தலைமுடியை பிடித்துஇழுத்து கீழே தள்ளிவிட்டு வாதி பயத்தில் தனது பாட்டியான இந்துராணி வீட்டுக்குள் ஓடியபோது எதிரி வாதியை பார்த்து நீ எங்க போனாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தும் கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியை எறிந்து வாதியின் தலையில் சிறு காயத்தை ஏற்படுத்தியும் சண்டையை விலக்க வந்த இந்துராணி என்பவரையும் பெண் என்றும் பாராமல் தெருவில் வைத்து போடி தேவிடியா என அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(1) 506(1) I.P.C 4 of TNPHW ACT ன் கீழ் எதிரியின் மீது, கடமலைக்குண்டு காவல் ஆய்வளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து, அவ்வாறே வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2.<u>நீதிமன்றம் பின்பற்றிய வலியுறுத்து சட்ட வகையங்கள்:</u>

இவ்வழக்கின் எதிரி, இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) 506(1) I.P.C 4 of TNPHW ACT ன் கீழ் எதிரி மீது, குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது,



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:31 +0530

எதிரி தான் குற்றவாளி அல்ல என மறுத்துரைத்துள்ளார். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு,அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய, வழிவகை செய்யப்பட்டது.

3.) அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக கூறி Crl.M.P 802/2026 பா.நி.சு.ச பிரிவு 359 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு சில குற்றம் சமரசம் செய்ய இயலாத குற்றம் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

4.எதிரி மீதான வழக்கினை மெய்ப்பிக்கும் பொருட்டு, அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:**

5.1)அரசு தரப்பில், அ.சா.1 திரு.புகார்தாரர் சம்பவம் பற்றியும் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.2)அ.சா.2 புலன்விசாரணை அதிகாரி மற்றும் உத்தியோக சாட்சி ஆவார். புகார் மனுவை பெற்று **அ.சா.ஆ 2.முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடம் சென்று **அ.சா.ஆ.3** பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ 4.**மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும் பின்பு எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.**கு.வி.மு.ச.பிரிவு 313 (1)(ஆ)ன் கீழான நடவடிக்கைகள்:**

அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து, எதிரிக்கு பாதகமான சங்கதிகளை தனியே தொகுத்து, அதைப்பற்றி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 313 (1)(ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி வினவ, எதிரி அவற்றை, பொய் சாட்சிகள் என மறுத்தும், தனது தரப்பில் சாட்சிகள், இல்லை எனவும் பதில் அளித்துள்ளார். எனினும், எதிரி தரப்பில்



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:38 +0530

எத்தகைய சாட்சிகளும், சான்றாவணங்களும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

7. <u>**தீர்வு காண வேண்டிய விவாத வினாக்கள்:**</u>

**தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கானது, தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால், சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.**

8. <u>**தீர்வு:**</u>**–**

8.1.) அரசு தரப்பு வழக்கானது, கடந்த 16.10.2023 ம் தேதி 21.30 வாதி கடமலைக்குண்டில் உள்ள தனது பாட்டியான இந்துராணி வீட்டின் முன்னால் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது எதிரி வாதியைப் பார்த்து தெருவில் வைத்து பெண் என்றும் பாராமல் ஏண்டி தேவிடியா கொண்டி, யாரையோ வச்சுருக்கடி என அசிங்கமாக பேசியபோது வாதி எதிரியிடம் எதுக்கு தேவையில்லாமல் பேசுறீங்க நம்ம குழந்தைக்கு ஏற்கனவே உடம்பு முடியாம இருக்கான் இப்ப நீங்களும் வீண் சந்தேகப்பட்டு பேசினால் நான் என்ன செய்யுறது இனிமேலும் இதுபோன்று பேசாதீங்க எல்லாரையும் போல நம்மலும் நல்ல வாழனும் என எதிரியிடம் சொன்னபோது எதிரி கையால் வாதியின் தலைமுடியை பிடித்துஇழுத்து கீழே தள்ளிவிட்டு வாதி பயத்தில் தனது பாட்டியான இந்துராணி வீட்டுக்குள் ஓடியபோது எதிரி வாதியை பார்த்து நீ எங்க போனாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தும் கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியை எறிந்து வாதியின் தலையில் சிறு காயத்தை ஏற்படுத்தியும் சண்டையை விலக்க வந்த இந்துராணி என்பவரையும் பெண் என்றும் பாராமல் தெருவில் வைத்து போடி தேவிடியா என அசிங்கமாக பேசியது என்பதே ஆகும்.



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:42 +0530

8.2)ஆனால், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திருமதி.அழகுசுபா தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " **நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். நான் வழக்கு தொடர்பாக தற்போது சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்கினை மேல்நடத்த விருப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.** " என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

8.3)மேலும் புகார்தாரர் அ.சா.1 இவ்வாறாக சாட்சியம் அளித்த நிலையில் புலன் விசாரணை தொடர்பாக அளிக்கப்பட்ட அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

8.4)மேற்காண்ட சூழ்நிலைகளும், அ.சா.1 சாட்சியம், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி, அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து, மேற்காண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>9. முடிவாக</u>**

எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) 506(1) I.P.C 4 of TNPHW ACT கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 248(1)ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

9.இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை ஆகையால் வழக்கு தடய சொத்து குறித்து உத்தரவு இல்லை.



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:47 +0530

10.எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:52 +0530

நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| | |
|---|---|
| அ.சா. 1 | திருமதிஅழகுசுபா |
| அ.சா.2 | திருமதி.வனிதா |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள்,** – இல்லை–

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள்:** இல்லை

**குறிப்பு:**

1.வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்கள்.

2.எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:02:56 +0530

வைக்கப்படவில்லை.

3. முடிவாக, எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) 506(1) I.P.C 4 of TNPHW ACT ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4.இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை ஆகையால் வழக்கு தடய சொத்து குறித்து உத்தரவு இல்லை

5.எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது

6.வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

7.தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர், தேனி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.06 17:03:00 +0530

நீதித்துறைநடுவர்,
ஆண்டிபட்டி.